1973 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. அ. பெ தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணா சாலையும் திரு.வி.க. சாலையும் சந்திக்கும் இடத்தில் பல மாடிகள் கொண்ட கட்டிட மொன்றை ரூ. 50,00,000 செலவில் கட்ட சென்னை மாநகராட்சி மன்றம் உத்தேசித்துள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM : Since most of the costly Government lands in the City are occupied by private Manrams and persons belonging to political parties, whether this Government have taken steps to evict and construct such remunerative buildings in those areas ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே மாநகராட்சி யினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. கட்டப்பட வேண்டிய இடங்கள் அதிகமாக இருக்குமானால் அவை பற்றியும் நடவடிக்கை எடுக்கப்படும்.

Taxi stands in Madras City.

* 235 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the right to collect fees at Taxi stands in Madras City have been leased out to private parties; and

(b) if so, the parties to whom and the details of the amount for which the right has been leased out ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) திரு. பி. எ. வெங்கடேசலு நாயுடு என்பாருடன் சென்னை மாநகராட்சி மன்றம், மூன்று ஆண்டுக்கு (1—4—1972 முதல் 31—3—1975 வரை) ரூ. 1,25,000-க்கு அவ்வுரிமையை அளித்து ஒப்பந்தம் செய்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : கார்ப்பரேஷன் டாக்ஸ் கலெக்டர் களின் மூலமாக நேரடியாக இந்தக் கட்டண வசூலைச் செய்தால் அதிக வருமானம் கிடைக்கலாமே ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுபற்றி பல இடர் பாடுகள் இருக்கின்றன என்பது தெரிந்ததற்குப் பின்புதான், அந்தப் பணி ஒப்பந்தத்திற்கு விடப்பட்டிருக்கிறது. மேற்கூறிய

இந்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமையை சென்னை ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் சங்கத்திற்கு அல்லது அதுபோன்ற சங்கத்திற்கு அளிக்கும் வகையில் சென்னை மாநகராட்சிச் சட்டப் பிரிவு 285-ஏ-ஐத் திருத்தலாமா அல்லது அதற்கு வழி செய்யும் விதிகளை வகுக்கலாமா அல்லது வேண்டாமா என்பது பரிசீலனையில் உள்ளது.

Accident due to fall of sign board near Anna Salai.

* 236 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any sign board of shops projecting outside a commercial establishment collapsed in Mount Road, near Anna Statue resulting in casualties about the 28th April 1973; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) அண்ணா சாலையில் "பிளாக்கர்ஸ் சாலை" வந்து சேரும் இடத்தில் நிர் 9 ('பி') எண் கொண்ட கட்டிடத்தில் அமைந்துள்ள ஜவுளிக் கடையின் விளம்பரப் பலகை 28—4—1973 நண்பகல் 1.30 மணிக்கு கீழே விழுந்தது. அச்சமயம் அவ் வழியாகச் சென்று கொண்டிருந்த ஏழு பாதசாரிகளுக்குக் காயம் ஏற்பட்டது. அவர்கள் வந்து தங்கும் நோயாளிகளாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். கட்டிட சேதம் ஏதும் இல்லை. மேற்படி பலகை சரியாகப் பொருத்தப்படாததால் கீழே விழுந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 237, 238, 239, 240, 241, 242 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகின்றன.

Concessional tickets for students in State Transport buses.

* 243 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to issue tickets at concessional rates for students in the State Transport Undertakings for their journeys to their native places during vacations; and

(*b*) if so, the details thereof?